சார்பு நீதிமன்றம். விருதுநகர்

H.M.O.P.No: 36/2021 Date: 17.10.2024

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி–1(Rw1)ன் வாக்குமூலம் (1872ம் ஆண்டு சாட்சிய சட்டம் 144 வது பிரிவின்படி திருமதி.K.சேர்மக்கனி, கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது)

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : சுகுமாரி | சாதி | : | -- |
| த/பெ | : காளீஸ்வரன் | சமயம் | : | -- |
| கிராமம் | : A.A.ரோடு | தொழில் | : | |
| தாலுகா | : விருதுநகர் | வயது | : | 36 |

முதல் விசாரணை

நான் இம்மனுவில் எதிர்மனுதாரர் ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை என் சாட்சியத்தின் ஒரு பகுதியாக வாசித்துக்கொள்ள வேண்டுகிறேன். திருமண பத்திரிக்கை **எ.ம.சா.ஆ.1.** குழந்தை ராஜஆதேவ் பிறப்பு சான்றிதழ் ஜெராக்ஸ் **எ.ம.சா.ஆ.2**. குழந்தை ராஜஆதேவ் ஆதார் அடையாள அட்டை ஜெராக்ஸ் **எ.ம.சா.ஆ.3**. என்னுடைய ஆதார் அடையாள அட்டை ஜெராக்ஸ் **எ.ம.சா.ஆ.4.** (அசலுடன் ஒப்பிடப்பட்டது). திருமணத்தின் போது எடுத்த புகைப்படம் தாக்கல். மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

இந்த வழக்கிற்கு முன்னர் ஏற்கனவே விவாகரத்து வழக்கு தாக்கல்செய்யப்பட்டு அது திரும்ப பெறப்பட்டு சேர்ந்து வாழ்ந்தோம் என்றால் சரிதான். அதன் பின்னர் நாங்கள் சிவகாசி, சாட்சியாபுரத்தில்

சேர்ந்து வாழ்ந்தோம். அங்கிருந்து நாங்கள் குடியிருந்த வாடகை வீட்டினை காலிசெய்து என் கணவரின் பெற்றோர் வீட்டில் அவர்களுடன் குடியிருந்தோம். கீழ்தளத்தில் எனது கணவரின் பெற்றோர்களும், முதல் தளத்தில் குடியிருந்தோம், அதில் 3 அறைகள் உள்ளது. நாங்கள் வாடகை வீட்டில் குடியிருந்த போது வீட்டின் உரிமையாளருக்கும், எனக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சிறு,சிறு பிரச்சனைகள் இருந்தது. எதிர்மனுதாரரின் பெற்றோர் வீட்டில் குடியிருந்த போது என் கணவர் என் மீது அன்பாகவும், பாசமாகவும் இருந்தார் என்றால் இல்லை. எனது கணவர் என் மீதும், குழந்தைகளின் மீதும் அன்பாக தான் இருந்தார் என்றால் இல்லை. என் மீது இருந்த அன்பினால் தான் தாம்பத்யத்தின் பயனாக கிடைக்க வேண்டிய குடும்ப வாழ்க்கையை என் கணவர் விரும்பி வந்து கேட்ட போது நான் தர மறுத்தேன் என்றால் சரியல்ல. அவ்வாறு என் கணவர் அன்புடன் என்னை நெருங்கி வந்த போது ஏன் இப்படி பெண் ஆசை பிடித்து அலைக்கின்றாய் என்றும், இதற்கு தான் என்னை அழைத்து வந்தாய் என்று கீழ்தரமாய் பேசி அவருக்கு மனதளவில் காயத்தினை ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. மாடியில் நானும், என் கணவரும் எதிர் எதிர் அறையில் தான் இருந்தோம். தாம்பத்யவாழ்க்கையை என் கணவருடன் வாழ கூடாது என்ற காரணத்தினால் தான் நான் என் கணவருடன் இருக்காமல் தனி அறையில் இருந்தேன் என்றால் சரியல்ல. என் கணவர் ஏற்கனவே தாக்கல் செய்திருந்த விவாகரத்து மனுவினை வாபஸ் பெற்ற நாளிலிருந்து நான் பிரிந்து சென்ற 10.03.2018 முடிய உள்ள காலத்தில் என் கணவருடன் குடும்ப வாழ்க்கை வாழவில்லை என்றால்

சரியல்ல. வழக்கிற்காக என் கணவருடன் குடும்ப வாழ்க்கை வாழ்ந்ததாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் 26.02.2018 என் கணவரை பிரிந்து சென்றேன் என்றால் என் கணவர் தான் என்னை வெளியே அனுப்பி விட்டார். நான் என் கணவருடன் சேர்ந்து வாழ கோரியுள்ள HMOP.No.74/2023 மனுவில் பக்கம்–6 ல் கடந்த 23.02.2018 ம் தேதி என் கணவர் அளவுக்கு அதிகமான மது போதையில் வந்து மின்சாரத்தை வைத்து என்னையும், குழந்தையையும் கொலை செய்ய முயற்சி செய்ததால் அன்றைய தினம் வேறு வழியின்றி உயிருக்கு பயந்து என் தகப்பனார் வீட்டிற்கு வந்துவிட்டேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அது போன்ற சம்பவம் 23.02.2018 அன்று நடக்கவில்லை என்றும், அதனால் தான் என்றைய தேதியில் நான் பிரிந்து சென்றேன் என்று மாறி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவர் என்னையும், குழந்தையையும் கொலை மிரட்டல் விடுத்தது கிடையாது என்றும், நான் தான் என் கணவரை விட்டு பிரிந்து சென்றேன் என்றும் சொன்னால் சரியல்ல. 23.02.2018 ல் என் கணவர் என்னையும், குழந்தையையும் கொடுமைப்படுத்தியது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். உண்மையில் நான் சொல்வது போல் சம்பவம் நடந்து இருந்தால் நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. 2018–2023 வரை நான் மனுதாரருடன் சேர்ந்து வாழ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். HMOP.No.74/2023 மனுவானது பின்னிட்டு என் கணவர் தாக்கல் செய்திருந்த விவாகரத்து மனுவில் அவர் கோரும் பரிகாரம்

கிடைக்கக்கூடாது என்பதற்காக பொய்யான சங்கதிகள் கூறி தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன் மனுதாரின் பெற்றோர்கள் இறந்துவிட்டார்கள் என்றால் 2021 ல் இறந்துவிட்டார்கள். எனது கணவரின் தாயார் தான் முதலில் இறந்துவிட்டார், 2 வதாக எனது கணவரின் தகப்பனார் இறந்துவிட்டார். இருவரின் இறப்பிற்கும் நான் என் மகனுடன் சென்றிருந்தேன். நாங்கள் இந்து நாடார் சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எங்கள் குலவழக்கப்படி தாத்தா, பாட்டி இறந்துவிட்டால் பேரன் இறுதி காரியத்தில் கலந்துகொண்டு நீர்மாலை விசேசத்தில் கலந்துகொண்டு மொட்டை போடும் வழக்கம் உண்டு என்றால் சரிதான். எனது மகனுக்கு தாத்தா, பாட்டி இறப்பிற்கு மொட்டை போடப்பட்டது. எனது மாமியார் இறப்பிற்கு நான் மறுநாள் தான் சென்றேன் என்றும், எனது மாமனார் இறந்த செய்தியே தெரியாது என்றும் நான் தாக்கல் செய்த எதிருரையிலும், என் மனுவிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது கணவரும், அவரது உறவினர்களும் மனுதாரின் பெற்றோர் இறந்துவிட்டதை சொன்ன பின்னரும் நானும், என் குழந்தையும் செல்லவில்லை என்றால் சரியல்ல. எனது கணவருடன் சேர்ந்து வாழக்கூடாது என்ற எண்ணத்தில் தான் நானும், என் குழந்தையும் எனது மாமனார், மாமியார் இறப்பிற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. எனக்கு மனுதாருடன் சேர்ந்து வாழ விருப்பமில்லை என்பதினால் தான் மனுதாரர் விவாகரத்து கோரி வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினார் என்றால் நோட்டீஸ் வந்தது உண்மை, ஆனால் அதில் உண்மைத்தன்மை இல்லை. அந்த வழக்கறிஞர்

அறிவிப்பிற்கு நான் பதில் அனுப்பவில்லை, ஏனென்றால் எனக்கு வாழ விருப்பம் என்பதால் பதில் அனுப்ப விருப்பமில்லை. நான் தற்சமயம் கள்ளிக்குடியில், தனியார் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் மனுதாரருடன் சேர்ந்து இருந்த காலத்திலும், அவரை விட்டு பிரிந்து இருந்த காலத்திலும் குழந்தையை மனுதாரையும், அவரது பெற்றோர்களையும் துாக்கவிடவில்லை என்றால் சரியல்ல. எனது மாமியார் ஏற்கனவே உடல்நிலை சரியில்லாமல் தான் இருந்தார் என்றால் சரிதான். நான் எனது மாமியார், மாமனாரை பராமரித்தது கிடையாது என்றால் சரியல்ல. எனக்கு என் கணவர் மீது இருந்த வெறுப்பினால் நான் அவருடன் குடும்ப வாழ்க்கை வாழ மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. அதனால் அவர் மனதளவில் மிகுந்த காயம் ஏற்பட்டு அவரது திருமண வாழ்ககை என் தவறுகையினால் முடிவுக்கு வந்துவிட்டது என்றால் சரியல்ல. கடந்த 2018ம் ஆண்டு நானாக தான் யார் துாண்டுதலுமின்றி, எந்த முகாந்திரமும் இன்றி என் கணவரை விட்டு பிரிந்து சென்றேன் என்றால் சரியல்ல. எந்தவொரு காலத்திலும் நான் சொல்வது போல் என் கணவர் என்னையும், குழந்தையையும் கொடுமைப்படுத்தியது கிடையாது என்றால் சரியல்ல. உண்மையில் என் கணவருடன் எனக்கு சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என்றும், நீதிமன்றத்தை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் என் கணவருக்கு விவாகரத்து கிடைக்கக்கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் என் கணவருடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று பொய்யான சங்கதியை கூறி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல்செய்துள்ள சேர்ந்து வாழ கோரிய மனு தள்ளுபடி

செய்யப்பட வேண்டும் என்றும், என் கணவரின் விவாகரத்து மனு அனுமதிக்கப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.